விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 150 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 04 வியாழக்கிழமை (18.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# ‘மே 18’ உறவுகளை நினைந்துருகும் தமிழினப் படுகொலை நாள் இன்று

(முள்ளிவாய்க்கால்)

- முள்ளிவாய்க்காலில் நினைவேந்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி.
- தமிழினத்தை அணிதிரளுமாறு ஏற்பாட்டுக்குழு அழைப்பு.





2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப்போரில் முள்ளிவாய்க்கால் பகுதியில் தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக கொன்றழிக்கப்பட்டதன் நினைவாக அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் இன்று வியாழக்கிழமை 14ஆவது ஆண்டு தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளது.

காலை 10.30 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் பாதிக்கப்பட்ட ஒருவர் பொதுச்சுடர் ஏற்றவுள்ளதோடு ஏனைய உறவுகளுக்கான சுடர்கள் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அனைத்து மக்களும் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தலில் கலந்து கொள்ளுமாறும் தத்தமது வீடுகளில் சுடர் ஏற்றி அஞ்சலிக்குமாறும் ஒருவேளை உணவாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை வீடுகளில் பரிமாறுமாறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொது கட்டமைப்பு

▷02

## விடுதலைப் புலிகளும் பேச்சு சந்தர்ப்பத்தை தவறவிடவில்லை தமிழர்களுக்காக நாங்களும் சந்திப்பில் பங்குபெறுவோம்

### ஜனாதிபதியுடனான சந்திப்புத் தொடர்பில் சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளும் பேச்சுக்களுக்கான சந்தர்ப்பம் வரும்போது பேச தவறவில்லை தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட நாங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான பேசும் சந்தர்ப்பம் வரும்போது பேச வேண்டியது கடமை என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழத்துக்காக போராடிய விடுதலைப்புலிகள் கூட அரசாங்கத்துடன் பேசுவதற்கான சந்தர்ப்பம் வரும்போது பேசுவதற்கு தவறவில்லை 1994ஆம் ஆண்டு - 2001 ஆம் ஆண்டுகளில் பேச்சுவார்த்தை

▷11

## கடன் மறுசீரமைப்பு சீனா ஆதரவு

(கொழும்பு)

இலங்கையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு, தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

இலங்கை தரப்புடன் இணைந்து பணியாற்றுவதில் சீனா தொடர்ந்தும் ஒத்துழைப்பு

▷02

## வட மாகாண ஆளுநராக பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பதவியேற்பு



▷11

## தொல்பொருளை சேதமாக்காமல் வழிபாடுகளை மேற்கொள்க

### வெடுக்குநாறி தொடர்பில் நீதிமன்றம் உத்தரவு

(வவுனியா)

வவுனியா வெடுக்குநாறி மலை ஆலயத்தில் தொல்பொருளை சேதமாக்காவண்ணம் எளியமுறையில் வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது.

மேலும், விக்கிரகங்கள் உடைப்புடன் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கு

▷11

## அதிக வெப்பம் மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் வெப்பநிலை அதிகரித்து காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்

▷02

### ஐ.எம்.எப் இன் இலக்கை அடைய

## அரசாங்கம் முன்மொழிந்த வேலைத்திட்டத்தை அமுலாக்குக

### ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

முடங்கிப்போன பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்மொழிந்திருக்கும் வேலைத்திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப் படுத்தினால் சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள இலக்குகளுக்கு மேலான இலக்குகளையும் குறுகிய காலத்தில் அடைந்துகொள்ள முடியுமென ஜனாதி

▷02

## யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் ஆனல்ட்

### கைதாகி பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை முன்னாள் முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் கைதாகி ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மேலும் குறித்த வழக்கு எதிர்வரும் ஜூலை 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப்பொலிஸ் நிலையத்தில் தனது சட்டத்தரணியுடன் யாழ்

▷11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்பு கம்பியால் தாக்கப்பட்ட 17 வயது இளைஞன் மரணம்

(கொழும்பு)

தனது தாயின், கணவர் எனக்கூறப்படும் நபரினால் தாக்கப்பட்ட 17 வயது இளைஞர் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

50 வயதான சந்தேகநபர், கடந்த 12 ஆம் திகதி மது போதையில் வீட்டுக்குச் சென்று, மேற்படி, இளைஞரின் தாயுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

அதன்போது, மதுபோதையில் வீட்டுக்கு வந்து சத்தம் போடவேண்டாம் என குறித்த இளைஞர் அவரை திட்டியுள்ளார்.

அதனையடுத்து, சந்தேக நபர் இரும்புக் கம்பியால் இளைஞரை தாக்கியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இளைஞன் சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் அங்கு சிகிச்சை பலனின்றி இளைஞர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ம-7,9)

## வடக்குக்குத் தேவையானதை நிறைவேற்ற
# முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக ஜனாதிபதி உறுதி
## வடமாகாண ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்ற தமக்கு ஜனாதிபதி முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்தார் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் வடக்கு மக்களுக்காக பணியாற்றுவதனை முன்னிட்டு தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

நேற்றைய தினம் ஜனாதிபதி முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் வடமாகாணத்திற்கான புதிய ஆளுநராக பொறுப்பேற்றதன் பின்னர் செய்தியாளர்களினை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துரைத்த அவர், வடக்கு மக்களின் அபிவிருத்திக்கு தன்னாலான ஒத்துழைப்பை நல்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னிடம் உறுதியளித்துள்ளார்.

இவ்விதமான தாராள மனதுடைய ஜனாதிபதியுடன் வடக்கு மக்களின் தேவைகள் குறித்து கலந்துரையாடி வடக்கின் அபிவிருத்திக்கு காத்திரமான பங்காற்ற எதிர்பார்த்துள்ளேன் என்றார்.

இதன்போது இரண்டாவது முறையாகவும் வடக்கின் ஆளுநராக நியமனம் பெற்றமை தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அவர் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இப் பதவியினை ஏற்றுக்கொண்டேன் வடக்கு மக்களுக்கு சேவையாற்றுவதனையே நோக்காக கொண்டு வடக்கின் மக்கள் பிரதிநிதிகளுடனும் இணைந்து கடமையாற்ற எதிர்பார்த்துள்ளேன் என்றார்.

இதன்போது ஆளுநர் என்ற ரீதியில் வடக்கின் நிலப்பரப்புகளில் இடம்பெறும் அந்நிய முதலீடுகள், ஆக்கிரமிப்புகள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளீர்கள் என வினவப்பட்ட போது,

வடக்கில் சீனா, இந்தியாவின் முதலீடுகள் தொடர்பிலான முடிவுகள் மத்திய ஆட்சியின் தீர்மானத்துக்கு அமைய முன்னெடுக்கப்படுபவை அவை தொடர்பில் தீர்மானம் எடுக்க ஆளுநருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்றார்.

(ம-7,9)




## இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்
### விசேட பொதுக்கூட்டம்

நாள் : 21.05.2023 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 10.00 மணி
இடம் : ஆலய பல்சேவை மண்டபம்
தலைவர் : திரு.ந.சிவகுமார்

**நிகழ்ச்சி நிரல்**

காலை 10.00 மணியளவில் அம்பாள் ஆலயத்தில் ஆராதனையுடன் ஆரம்பித்து அடியவர்கள் ஆலய பல்சேவை மண்டபத்துக்குள் அழைக்கப்படுவார்கள்.

01. மங்கல விளக்கேற்றல்
02. தேவாரம் ஓதுதல்
03. ஆசியுரை
04. தலைமையுரை
05. ஆலய பாலஸ்தாபனம் செய்தல் தொடர்பாக ஆராய்தல்
06. நன்றியுரை

ஆலய அறங்காவலர் சபையினர்
(C-6578) 'அம்பாள் அருள் அகிலம் ஆளும்'



## வெளிநாடுகளுக்கு சட்டரீதியாக செல்வதற்கு

இந்தியா விசா மற்றும் லண்டன்,கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான சகல விசாக்களும் விரைவாக செய்து தரப்படும்.

பாதுகாப்பன பயணங்களை மேற்கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Hybrid international hub pvt ltd, Jaffna
076 250 0098, 021 222 1265
077 815 5920 (C-6575)


## மக்களுக்கு...

ளது.

இதேவேளை, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் வெப்ப சுட்டெண் உயர் மட்டத்தில் காணப்படுவதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதிகளில் வசிப்பவர்கள் நீரேற்றத்துடன் இருக்குமாறும் முடிந்த வரை நிழலில் இருக்குமாறும் அறிவுறுத்தப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், வானிலை திணைக்களம் மேலும் அந்த பகுதிகளில் வசிப்பவர்கள் வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணியுமாறும், வெளிப்புற நடவடிக்கைகளை கட்டுப்படுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளது. (ம-7,9)

## அரசாங்கம்...

பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் மாகாண செயலாளர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டமை மற்றும் தங்களது எதிர்காலம் தொடர்பில் இளையவர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அரசியல்வாதிகள் தொடக்கம் அரசாங்க அதிகாரிகள் வரையில் அனைவரும் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த ஜனாதிபதி சகலரும் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தால் கடந்த கால தவறுகளை திருத்திக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின் சில அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டியது அவசியமென வலியுறுத்திய ஜனாதிபதி, மக்கள் பணம் வீணடிக்கப்படுவதை தவிர்க்க வேண்டுமெனில் அமைச்சரவை செயலாளர்கள் அமைச்சுகளுக்கு கீழுள்ள நிறுவனங்களை பாதுகாப்பதற்கு மாறாக அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மாகாண சபைகளின் முதலீட்டுச் செலவுகள் மற்றும் மூலதனத் திட்டங்கள் தொடர்பில் புதிய சட்டதிட்டங்களை கொண்டுவர வேண்டியது அவசியமெனவும், கீழ் மட்டம் வரையில் அதிகாரங்களை பகிர்வது தொடர்பில் அடுத்த இரு வாரங்களுக்குள் தீர்மானம் எட்டப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7,9)

## சீனா ஆதரவு...

டன் செயற்படுகிறது என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## 'மே18'...

அழைப்பு விடுத்துள்ளது.நாளைய நினைவேந்தல் ஏற்பாடுகளோடு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் மற்றும் ஆத்மா சாந்தி நிகழ்வுகளும் முள்ளிவாய்க் கால் பகுதியில் இடம்பெறவுள்ளது. (ம-7,9)


## வான் விற்பனைக்கு

59
சுப்பர் G.L
102 கட்ட மொடல்

127, Navalar Road,
Jaffna.

077 592 5450

(15548)


## மரண அறிவித்தல்

### மாணிக்கம் பரமேஸ்வரன் (சின்னத்தம்பி)



நவாலி வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் பரமேஸ்வரன் (சின்னத்தம்பி) அவர்கள் (15.05.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.05.2023 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது. தவிர்க்க முடியாத காரணத்தால் இவ் அறிவித்தலை உடனடியாக அறியத் தரமுடியவில்லை.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(15550)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பழைய மாணவனும், முன்னாள் தமிழ் ஆசிரியருமான

**கலாநிதி கார்த்திகேசு திருப்பதி**

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

(15547)

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள்
# நீதியை வழங்க மறுக்கும் இலங்கை அரசாங்கம்
## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

**இலங்கை அரசாங்கம் முட்டுக்கட்டை போடுவதை நிறுத்திவிட்டு மிகவும் பாரதூரமான போர்க்கால குற்றங்கள் குறித்து விசாரணை செய்யவேண்டிய தனது கடப்பாட்டை நிறைவேற்றவேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள்விடுத்துள்ளது.**

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி இதனை தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் நீதிக்கான முயற்சியை தீவிரமாக தொடர்வதற்காக ஐ.நா வின் பொறுப்புக்கூறல் திட்டத்துடன் உலக நாடுகள் தீவிரமாக இணைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விடுதலைப்புலிகளிற்கு எதிரான மோதலின் போது இலங்கை இராணுவம் பாதுகாப்பு வலயங்கள் மீது குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டவேளை ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அரசபடையினர் பெருமளவு விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களை அவர்களின் ஆதரவாளர்களான பொதுமக்களை படுகொலை செய்தனர். பலவந்தமாக காணாமல்போகச்செய்தனர்.

14 வருடங்களின் பின்னர் இலங்கை அரசாங்கம் தனது படைகள் இழைத்த கொடுமைகளை மறுக்கும் நிராகரிக்கும் நிலையிலேயே உள்ளது.

தங்கள் அன்புக்குரியவர்களிற்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காக தொடர்ச்சியாக முயற்சிகளில் ஈடுபட்டுள்ள காணாமல் போனவர்களின் தாய்மார்கள் குழு பாதுகாப்பு தரப்பிடமிருந்து தொடர்ச்சியாக துன்புறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர்.

அரசாங்கம் தகவல்களையோ நீதியையோ வழங்க மறுக்கின்றது.

காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பதற்காக அரசாங்கம் காணாமல் போனவர்கள் குறித்த அலுவலகத்தை ஏற்படுத்தியது.

ஆனால் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என தெரிவித்துள்ள மீனாக்சி கங்குலி. கடந்த ஏப்ரலில் ஐ.நா அறிக்கை கடந்த காலத்தில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை நியமித்தமைக்காக இந்த அமைப்பை சாடியிருந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கையில் மீண்டும் கொரோனா அலை
## சுகாதாரப் பழக்கங்களை பின்பற்றாவிடில் பெரும் அபாயம்
## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்



(கொழும்பு)

கொவிட் நோயாளர்களை கண்டறியும் பரிசோதனைகள் பரந்த அளவில் மேற்கொள்ளப்படாமையால் பொதுமக்கள் பாரிய சுகாதார பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக பொதுச் சுகர்தார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அச்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன நேற்று விசேட அறிக்கையொன்றை விடுத்ததுடன், பாதுகாப்பிற்காக மீண்டும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுமாறு அவர் மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

சாதாரண மட்டத்தில், சில வைரஸ் நோய்கள் மற்றும் கொவிட் -19 என்று சந்தேகிக்கக்கூடிய ஒரு நோய் பெரிய அளவில் பரவுகிறது. பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களில் இது ஒரு தொற்றுநோயாக பரவுகிறது.

எனவே பொதுமக்களாகிய நாம் இந்த தருணத்தில் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

எனவே, உங்கள் வாழ்க்கையின் பாதுகாப்பிற்காக முன்னர் வழங்கப்பட்ட அனைத்து சுகாதார ஆலோசனைகளையும் கண்டிப்பாக பின்பற்றுவது மிகவும் முக்கியம் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

24 ஆவது பிறந்த தினமும்
898 ஆவது நாள் நினைவு அஞ்சலியும்

அமரர்.
லோகேஸ்வரன் பிரவீனன்
[கபிலன்]
உயர்தர மாணவன் – 2018 வசாவிளான் மத்திய கல்லூரி.

தாயின் மடியில் 18.05.1999
ஆண்டவன் அடியில் 11.11.2020



அப்பாவின் தலைமகனே! தம்பி கபிலன். என் செடியில் பூத்த பூவே தம்பி கபிலன். திசை மாறிப் போனதால் எங்கள் வீட்டில் பட்டாம் பூச்சிகளும் பறப்பதே இல்லை தம்பி கபிலன். உன்னுடைய பிறந்த நாள் என்றால் எங்கள் வீடு விழாக்கோலம் பூணுமே. இன்று எங்கள் வீடு பாலைவனம் ஆனதே. தம்பியின் பிறந்த நாள் என்றால் தம்பி, தங்கைமார் எல்லாம் அதிகாலையில் எழுந்து வாழ்த்துச் சொல்வார்களே. இம்முறை பிறந்த நாளில் அதிகாலையில் எழுந்து பார்க்கிறார்கள் வாழ்த்துச் சொல்ல கபிலன். எங்களை விட்டு சிவன் கோயிலில் சிவனாய் வீற்றிருக்கிறாய். மடிப்பிச்சையாய்க் கேட்கிறேன் என் பிள்ளையைத் திருப்பித் தந்துவிடு இறைவா. உன்னை வீட்டிற்கு அழைத்து வர நினைக்கின்றோம். கனவாகிப் போகின்றதே நிஜமாக வந்துவிடு கபிலன். அப்பா மடிதான் தம்பிக்கு சொர்க்கம் அல்லவோ அப்பாவின் மடியில் படுத்து உறங்க மீண்டும் வந்துவிடு கபிலன். அப்பாவை விட்டு ஒரு நாளும் பிரியாத தம்பி ! அப்பாவை விட்டு தனியாக தூரதேசம் சென்றதேனோ! அப்பா உன்னை தேடுகின்றேன். தம்பி நட்டமாமரமும் பூக்கவில்லையே தம்பி வரட்டும் என்று சொல்லி காத்திருக்கின்றது.

ஆலமரம் போல் நீ வாழ்க!
அதில் ஆயிரம் பறவைகள் இளைப்பாற காலமகள் உன்னை தாலாட்ட!


புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா,அம்மா, தம்பி, தங்கைமார்.

(சி-6571,15543)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரபரப்பான போட்டியில் மும்பையை வீழ்த்தி லக்னோ திரில் வெற்றி



ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் லக்னோவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற மும்பை அணி பீல்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பட்டிங் செய்த லக்னோ அணி 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 177 ரன்கள் சேர்த்தது.

ஸ்ரோயின் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 89 ரன்கள் சேர்த்தார்.

மும்பை இந்தியன்ஸ் சார்பில் ஜேசன் பெஹ்ரன்டாப் 2 விக்கெட்டும், பியூஷ் சாவ்லா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 178 ரன்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக் காரர்களான இஷான் கிஷன், கப்டன் ரோகித் சர்மா அதிரடியாக ஆடினர்.

முதல் விக்கெட்டுக்கு 90 ரன்கள் சேர்த்த நிலையில் ரோகித் சர்மா 37 ரன்னில் அவுட்டானார்.

இஷான் கிஷன் அரை சதமடித்து 59 ரன்னில் வெளியேறினார். சூர்ய குமார் யாதவ் 7 ரன்னிலும், வதேரா 16 ரன்னிலும் அவுட்டாகினர்.

கடைசி கட்டத்தில் டிம் டேவிட் அதிரடியில் மிரட்டினார். அவர் 32 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இறுதியில், மும்பை அணி 172 ரன்களை மட்டுமே எடுத்தது.

இதன்மூலம் லக்னோ அணி 5 ரன்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

லக்னோ அணி சார்பில் ரவி பிஷ்னோய், யாஷ் தாக்குர் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். (4)

# சிநேகபூர்வ பூப்பந்தாட்ட போட்டி





கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கிடையிலான சிநேகபூர்வ பூப்பந்தாட்ட போட்டி நேற்று முன்தினம் சிறப்புற இடம்பெற்றது.

குறித்த போட்டித் தொடரானது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிற்கிடையில் நட்புறவை வளர்க்கும் முகமாக இடம்பெற்றது.

கிளிநொச்சி வடமாகாண உள்ளக விளையாட்டரங்கில் சிறப்பாக ஆரம்பித்த இவ் நட்புறவு போட்டித்தொடரில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரு அணிகளும் ஒற்றையர், இரட்டையர் மற்றும் கலப்பு முறையிலான போட்டிகளில் பங்குபற்றியிருந்தனர். (4-6-316)

# வைகாசி மாத இராசி பலன்கள் 15.05.2023-15.06.2023

## மிதுனம்

**மனதில் பட்டதை மறைக்காமல் பேசும் மிதுன இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே விரயாதிபதி சுக்கிரன் வீற்றிருக்கிறார். எனவே தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டு. கூட்டுத் தொழில் செய்வோர் தனித்து இயங்கும் நேரம் இது. சனி பகவான் 9 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப் படுவர். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பக்கபலமாக இருக்கும் நண்பர்களின் ஒத்துழைப்போடு புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி காணப்போகிறீர்கள்.

**ராகு-கேது சஞ்சாரம்**

பின்னோக்கிச் செல்லும் கிரகங்களான ராகு பகவான் லாப ஸ்தானத்திலும், கேது பூர்வ புண்ணிய ஸ்தானத்திலும் சஞ்சரிக்கின்றனர். அங்ஙனம் சஞ்சரிக்கும் கேதுவை குரு பார்ப்பதால், பிள்ளைகள் வழியில் சுப நிகழ்ச்சிகள் திடீரென நடைபெறலாம். பூர்வீக சொத்துகளை பிரித்துக் கொள்வதில் இருந்த தடைகள் அகலும். பூர்வீக சொத்தைக் கொடுத்து விட்டு, புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சியிலும் ஆர்வம் காட்டு வீர்கள். இதுவரை உங்கள் கருத்துக்கு ஒத்து வராத பிள்ளைகள், தற்போது உங்கள் கருத்துக்கு இணங்குவர். பாகப் பிரிவினையின் காரணமாக பணவிரயமும் ஏற்படலாம். உத்தியோகத்தில் கூடுதல் சம்பளம் தருவதாக வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து அழைப்புகள் வரலாம். ராகுவின் பலத்தால் அந்த வாய்ப்பு கைகூடலாம்.

**கடக - சுக்கிரன்**

வைகாசி 16 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்கு நீச்சம் பெற்றுச் சஞ்சரிக்கும் செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கள யோக"த்தை உருவாக்கு கிறார். எனவே உடன்பிறப்பு களுக்கு திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடை அகலும். உடன்பிறப்புகளின் வேலை வாய்ப்பு கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே பெண் குழந்தைகளின் சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

**ரிஷப - புதன்**

வைகாசி 18 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். அங்குள்ள சூரியனோடு இணைந்து "புத ஆதித்ய யோக"த்தை உருவாக்குகிறார். உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரய ஸ்தானத்திற்கு புதன் வருவதால், வரவைக் காட்டிலும் செலவு கூடும். வளர்ச்சி கருதி செலவிட்டாலும், கையில் பணம் தங்குவது அரிது. மாமன், மைத்துனர் வழியில் சில நல்ல காரியங்கள் நடைபெறும். மனை கட்டிக் குடியேறும் யோகமும் உண்டு. அரசியல் மற்றும் பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு, லாபம் திருப்தியாக அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, கேட்ட இடத்திற்கு மாறுதலும், சம்பள உயர்வும் கிடைக்கலாம். கலைஞர்களுக்கு கைநழுவிச் சென்ற வாய்ப்புகள் மீண்டும் வரலாம். மாணவர்களுக்கு உயர் கல்வி தொடர்பான முயற்சி வெற்றியாகும். பெண்களுக்கு சுபச்செலவுகள் அதிகரிக்கும். பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் நடந்துகொள் வீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

## கடகம்

**மற்றவர்களின் தேவையை அறிந்து உதவும் கடக இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியிலேயே செவ்வாய் நீச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். உங்களுக்கு யோகம் செய்யும் கிரகம் வலிமை இழந்திருப்பதால், நினைத்த காரியங்கள் நிறைவேறாமல் போகலாம். அஷ்டமத்தில் சனி அடியெடுத்து வைத்திருப்பதால், புது முயற்சிகளில் அலைச்சல் ஏற்படுமே தவிர, ஆதாயம் இருக்காது. உழைப்பிற் கேற்ற ஊதியம் கிடைப்பது அரிது. ஆரோக்கிய சீர்கேடுகள் அவ்வப்போது தலைதூக்கும். எதைச் செய்தாலும் அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளையும், அருளாளர்களின் ஆசிகளையும் பெற்றுச் செய்யுங்கள். தொழில் வியாபாரத்தில் கூடுதல் கவனம் தேவை.

**ராகு-கேது சஞ்சாரம்**

மாபெரும் கிரகங்கள் என்று சொல்லப்படும் ராகு-கேதுக்களை, "சாயா கிரகம்" என்று அழைப்பது வழக்கம். பின்னோக்கி நகரும் அந்த கிரகங்கள் வழிபாட்டின் மூலம் நமக்கு முன்னேற்றத்தை வழங்கும். 10இல் இருக்கும் ராகுவோடு குருவும் இணைந்திருப்பதால், தொழில் வளம் சிறப்பாக இருக்கும். உடன் இருக்கும் பணியாளர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். அதே நேரத்தில் சுக ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. உங்கள் உடல்நலத்திலும், தாயின் உடல்நலத்திலும் மிகுந்த கவனம் தேவை. வீட்டில் உபயோகப்படுத்தும் விலை உயர்ந்த பொருட்கள் அடிக்கடி பழுதாகி அயர்ச்சியை ஏற்படுத்தும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கேற்ற அங்கீகாரம் கிடைக்காது. ராகு-கேதுக்களுக்குரிய பரிகாரங்களைச் செய்வது நல்லது.

**கடக - சுக்கிரன்**

வைகாசி 16 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அவர் அங்கு நீச்சம் பெற்று சஞ்சரிக்கும் செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கள யோக"த்தை உருவாக்கிறார். எனவே தாமதப்பட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும். சேமிப்பு உயரும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு திடீரென பொறுப்புகள் மாறலாம். தாய்வழி ஆதரவு உண்டு. வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த அனுகூலமான தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் இதுவரை பகை பாராட்டிய மேலதிகாரிகள் இப்பொழுது இணக்கமாக நடந்துகொள்வர். கேட்ட இடத்தில் கடன் உதவி கிடைக்கும்.

**ரிஷப - புதன்**

வைகாசி 18 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடத்திற்கு அதிபதியான புதன், லாப ஸ்தானத்திற்கு வருகையில் விரயத்திற்கேற்ற வரவு வந்துகொண்டே இருக்கும். வீண் விரயங்களை சுபவிரயங்களாக மாற்றிக்கொள்ள முன்வருவீர்கள். நல்ல சம்பவங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும். விலகிச் சென்ற உறவினர்கள் மீண்டும் வந்து இணைவர். உத்தியோகத்தில் உள்ளவர்கள், உயர்ந்த நிலையை அடைவதற்கான சந்தர்ப்பங்கள் கூடிவரும். சூரியனோடு புதன் இணைந்து "புத ஆதித்ய யோக"த்தை உருவாக்குவதால், கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். "படிப்பிற்கேற்ற வேலை இல்லையே" என்று கவலைப்பட்டவர்களுக்கு, எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு, புதிய பாதை புலப்படும். தொழில் செய்பவர்கள், விழிப்புணர்வுடன் செயற்படுங்கள். உத்தியோகத்தில் சிலருக்கு, சகப் பணியாளர்களால் பிரச்சினைகள் அதிகரிக்கும். கலைஞர்களுக்கு கைநழுவிச் சென்ற வாய்ப்புகள் மீண்டும் வரலாம். மாணவர்களுக்கு மறதி அதிகரிக்கும். படிப்பில் கவனம் செலுத்துங்கள். பெண்களுக்கு உடல் உபாதைகள் ஏ்றபளளளளடாமல் இருக்க ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை. கணவன் - மனைவி ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். பணி புரியும் பெண்களுக்கு இடமாற்றம் உறுதி யாகலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதிஅட்டை விநியோகம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக் கான அனுமதிஅட்டைகளை தபாலில் அனுப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்க ப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணை க்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதிஅட்டைகளை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனு மதி அட்டைகளை அவர்களது தனிப்பட்ட முகவரிகளுக்கும் அனுப்புவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சை கள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பரீட்சை அனுமதிஅட்டையிலுள்ள பெயர், தேசிய அடையாள அட்டை இலக் கம், பிறந்த திகதி, விண்ணப்பித்த பாடங் கள் மற்றும் மொழி மூலத்தில் மாற்றம் இருக்குமாயின் அல்லது புதிதாக ஏதா வது விடயத்தைச் சேர்க்க வேண்டு மாயின் அதனை Online ஊடாக மேற் கொள்வதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரி வித்தார்.

இந்தத் திருத்தங்களை எதி ர்வரும் 24 ஆம் திகதி நள்ளிரவு வரை மேற் கொள்ள முடியும் என அறிவுறுத்த ப்பட்டுள்ளது. (நி)

3ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



## அமரர். கந்தையா சிவபாதம்

(இளைப்பாறிய பிரதி அதிபர்- ஆசிரியர்கலாசாலை பலாலி)

மண்ணில் 20.05.1944

விண்ணில் 18.05.2020

அன்பின் ஊற்றாகி எம்
ஆழ்மனங்களில் பதிந்திருக்கும்
எம் அருமையானவரே
வருடம் மூன்று ஓடி மறைந்ததய்யா
மாறுமோ எம் மனங்களில்
உம் நினைவு!
நீங்கள் எம்முடன் இல்லை என்றாலும்
உம் நினைவுகள் எம்முடனேயே
வாழும்!

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

(15542)

**குடும்பத்தினர்.**

# இராசிபலன்

18.05.2023
வைகாசி 04 , வியாழக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு- 10.08 மணிவரை

அச்சுவினி முற்பகல் 7.51 மணிவரை
சுபநேரம் -7.23-8.53 மணிவரை
இராகுகாலம்-1.23-2.53 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம் - உத்தரம்.

வள்ளவன்

**மேஷம்** எடுத்த காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம்,நல்லவர் களைச் சந்தித்து நலம் காணும் நாள், ஆரோக்கியத்தில் அக் கறை காட்டுவீர்கள், சிலர் மீது காரணமற்ற கோபம் ஏற்படலாம்.

**ரிஷபம்** பொறுப்பாக வேலை களைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல் லுக்கு ஆட்பட நேரிட லாம்,காரிய அலைச்சல்கள் ஏற்ப டலாம்,சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடை க்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குது கலம் தரும் சம்பவங்கள் இடம் பெற்லாம்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** கண்ணியம் மிக்க ஒரு வரின் சந்திப்பு இடம் பெறலாம்,செய்தொழி லில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,தொலைபேசி வழி யில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்** எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், பயண ங்கள் கைகூடும் வாய் ப்புண்டு,எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ் நிலை ஏற்படலாம்.

**கன்னி** ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாக லாம்,சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், யாரையும் விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது.

**துலாம்** பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர் கள்,வருமானம் திரு ப்தி தரும் வகையில் அமையும்,நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம், முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** ஆரோக்கியம் சம்ப ந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும்,பணத்தேவை கள் எளிதில் பூர்த்தியாகும்,அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**தனுசு** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிக ரிக்கும் நாள்,உறவினர் வழியில் ஒத்துழைப்பு க்கள் கிடைக்கும், காலை நேர த்திலேயே கலகலப்பான தக வல்கள் வந்து சேரலாம்.

**மகரம்** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூற முன்வரலாம், வர வேண்டிய வரவுகள் வந்து சேர லாம், பயணங்கள் கைகூடும் வாய்ப் புண்டு.

**கும்பம்** தன்னம்பிக்கை அதிகரிக் கும் நாள், எதற்காகவும் வீண் பிடிவாதம் செய் வதைத் தவிர்ப்பது நல்லது, பொன்னான நாள், பொருளாதார நிலையில் முன்னே ற்றம் காணும் நாள்.

**மீனம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வருங் கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

நல்ல பணிகளுக்கு ஆணிவேர் நல்ல பணிவு தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கறுவாச்செய்கையை ஊக்குவிக்க விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கறுவா செய்கையை ஊக்குவிக்கும் முகமாக அது குறித்த விளக்க செயலமர்வு ஒன்று நாளை மறுதினம் 20 ஆம் திகதி சனிக்கிழமை வட்டுக்கோட்டை பங்குரு முருகன் கோவில் சமூக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 1 மணி வரையில் நடைபெறும் இந்த செயலமர்வில் கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ.ஜெயசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வடக்கில் கறுவாச் செய்கையை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்பாக விளக்க உரை நிகழ்த்தவுள்ளார்.

அதனைவிட கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் பலரும் இந்த செயலமர்வில் கலந்துகொண்டு, கருத்துத் தெரிவிப்பதுடன், பொதுமக்களின் கேள்விகள், சந்தேகங்களுக்கு பதிலளிப்பார்கள்.

வடபகுதியில் கறுவாச் செய்கையை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதற்கான செய்முறை விளக்கங்களும் இங்கு வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்களுக்கு கறுவா கன்றுகளும் இலவசமாக வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் யாரும் இந்த செயலமர்வில் பங்குகொண்டு பயனடைய முடியும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலதிக தகவல்கள் தேவைப்படுபவர்கள் நிகழ்ச்சி இணைப்பாளரான ஜங்கரனுடன் 077 062 9013 தொடர்புகொள்ளமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(4-6-33)

# சிறுவர் இலக்கியம் தொடர்பான ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 5C ஆவது ஆண்டையொட்டி முன்னெடுக்கப்பட்டு வரும், மாதாந்த ஆய்வரங்குத் தொடரின் 4 ஆவது நிகழ்வு, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில், கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள, தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் "மக்கள் கலை இலக்கிய முன்னோக்கில் ஈழத் தமிழ் சிறுவர் இலக்கியம்" என்ற தலைப்பில் இடம்பெறவுள்ளது.

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் ஐ.சாந்தன் தலைமையில் இடம் பெறவுள்ள இவ் ஆய்வரங்கில், ஆய்வுரையினை எழுத்தாளர் இயல்வாணன் மேற்கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுக்கின்றனர். (4-6)



வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாமொன்று நேற்று புதன்கிழமை காலை நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

(படம்:-சிவசாந்தன்)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண் டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை சத்திர சிகிச்சையினை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான நோயாளர்களைத் தெரிவு செய்யும் கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் வட்டுக் கோட்டை பிரதேச வைத்திய சாலையிலும் கைதடி ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவிலும் நடைபெறவுள்ளது.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண் டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4)

# சட்டவிரோத மணல் அகழ்வு சாரதி பொலிஸாரால் கைது



(அராலி)

குடத்தனை கிழக்கு சுடலைக்குள் மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு இளைஞர்களால் முறைப்பாடு வழங்கப்பட்டது. முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த மணல் மண் ஏற்றிய டிப்பர் ரக வாகனம் கைப்பற்றப்பட்டதுடன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் டிப்பர் வாகனமும் பருத்தித்துறை பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-6-104)

# மகாஜனா சம்பத் சீட்டிழுப்பில் 1 கோடி 28 லட்சம் வெல்லப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் சீட்டிழுக்கப்பட்ட மகாஜனா 'சம்பத்' ரிக்கெட் ஊடாக சூப்பர் பரிசு ஒரு கோடி 28 லட்சம் சுன்னாகம் முகவர் பாலசுந்தரம் சண்முகதாஸ் என்பவரின் விற்பனை யில் வெல்லப்பட்டுள்ளது. மேலும் அதே சீட்டிழுப்பில் 1 லட்சம் ரூபாவும் வெல்லப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 3 ஆம் திகதி மகாஜனா சீட்டிழுப்பில் கே.கே.எஸ் முகவர் ஆரணி ஜெயவாணன் என்பவரது விற்பனையில் ரூபாய் 20 லட்சம் வெல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 260 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 200 | 200 |
| தக்காளி | 550 | 400 | 400 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| கோவா | 240 | 260 | 250 | 300 |
| கரட் | 200 | 330 | 150 | 360 |
| பூசணி | 100 | 80 | 70 | 100 |
| புடோல் | 120 | 140 | 120 | 300 |
| வாழைக்காய் | 100 | 90 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 360 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 130 | 140 |
| பாகற்காய் | 400 | 350 | 500 | 500 |
| வெண்டக்காய் | 150 | 140 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 130 | 200 |
| பயற்றங்காய் | 120 | 140 | 100 | 120 |
| லீக்ஸ் | 200 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 250 | 250 | -- | 350 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 400 | 1000 |
| போஞ்சி | 550 | 500 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 280 | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 180 | 200 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 340 | 260 | 250 | 350 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 80 | 180 | -- | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 150 | -- | -- | -- |


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1947 . 08 . 17

இறப்பு 2022 . 05 . 29



அமரர்.திருமதி. தவச்செல்வம் சிவமணி

பிள்ளைச் செல்வம் நீ அம்மா எங்கள் பேரின்பம் நீ அம்மா
பேசும் தெய்வம் நீ அம்மா எங்கள் பிருந்தாவனம் நீ அம்மா
சின்னக் குயில் நீ அம்மா எங்கள் வண்ணமயில் நீ அம்மா
பச்சைக்கிளி நீ அம்மா எங்கள் பழச் சோலை நீ அம்மா
உன்னை பிரிந்ததனால் நாங்கள் உயிர் இன்றி வாழ்கின்றோம்
உன்னை இழந்ததனால் நாங்கள் உருக்குலைந்து போகின்றோம்
கண்ணை இழந்த பின்பும் நாங்கள் காண்போமா இவ்வுலகை
உன்னை இழந்த பின்பும் நாங்கள் உயிர் கொண்டு வாழ்வோமா?
வாரும் அம்மா வையகத்தில் நாங்கள் வழிபார்த்து காத்திருப்போம்
தாரும் அம்மா உம் பாதம் நாங்கள் தலை சாய்த்து தூங்கிடுவோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மந்திகை,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே-18 தமிழினம் குருதியில் குளித்த நாள்

அபிமன்யு

- மே -18 தமிழினத்தின் மனங்களில் ஆறாத வடுக்களை பச்சை குத்திய நாள்.
- தமிழினத்தின் சரித்திரத்தை இல்லாதொழிக்க தீட்டிய திட்டத்தின் இறுதி நாள்.
- தமிழினம் கொத்துக் கொத்தாய் மடிந்தொழிந்த நாள்.
- தமிழினம் பலமிழந்து செய்வதறியாது துஞ்சித் துடித்த நாள்.
- தமிழினம் குருதி வெள்ளத்தில் குளித்த நாள்.
- தமிழினம் தன்மானம் இழந்து நடைபிணமாய் கிடந்த நாள்.
- தமிழினம் தன் சொந்த பந்தங்களை இழந்து அநாதையாய் நின்ற நாள்.
- தமிழினம் முதன் முதலாய் தோல்வியைத் தழுவி தலை குனிந்து நடந்த நாள்.
- தமிழினம் மிருகங்கள் போல முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்ட நாள்.

மே-18 இந்த கறைபடிந்த நாளை தமிழினம் மறந்து விடுமா? நிச்சயம் மறந்து விடாது.

மறந்து விட்டார்கள் என யாரேனும் நினைத்தால் அவர்கள்போல முட்டாள்கள் வேறு யாருமாக இருக்கமாட்டார்கள். அந்தளவுக்கு தமிழினம் பல இன்னல்களை முள்ளிவாய்க்கால் மண்ணில் பட்டது என்பதே உண்மையானது.

பயங்க ரவாதத்தை அழிக்கின்றோம் எனும் போர்வையில் ஒரு இன அழிப்பே முள்ளிவாய்க்கால் மண்ணில் நடந்தேறியது.

ஆனால் சர்வதேச அன்னை தன் கண்களை இறுக மூடியபடி இருந்தது ஏன் என்பதுதான் இன்றுவரை தமிழ் மக்களுக்கு புரியவில்லை.

உலகின் வேறு எந்த மூலையில் இவ்வாறானதொரு சம்பவம் நடந்திருக்குமாக இருந்தால் சர்வதேசம் அங்கு சென்று அதை கண்டித்து உடன் தடுத்து நிறுத்தியிருக்கும்.

ஆனால் முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழினம் கேட்க நாதியின்றி கொன்றொழிக்கப்பட்டது.

போர் என்றால் இழப்புகள் - இறப்புகள் வருவது சகஜம் என்றாலும் வன்னிப் பெரு நிலப் பரப்பில் போர் மீறல்கள், இன அழிப்பின் உச்சமாய் உருவெடுத்திருந்தன.

அதற்கான சான்றுகள் பல வெளியாகியிருந்த போதிலும் அவை எவையும் சர்வதேசத்தின் கண்ணுக்கு தெரியாது போனது தான் வேதனை.

இறுதி யுத்தத்தில் போர் குற்ற மீறல்கள் எவையும் நடைபெறவில்லை என் இலங்கை அரசு தெரிவித்ததுடன் படையினர் மீது எவ்வித நடவடிக்கையையும் எடுக்கப் போவதில்லை.

அவ்வாறு நடவடிக்கை எடுக்க சர்வதேசத்திற்கு எவ்விதத்திலும் அதிகாரம் இல்லை என சர்வதேசத்தை அதட்டி; சீனா, ரஷ்யா போன்ற அமெரிக்க எதிர்ப்பு நாடுகளின் போர்வைக்குள் ஒழிந்து தன்னை பாதுகாக்க முற்பட்டது.

ஆயினும் தாம் அழித்தொழித்தது இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்பதை மறந்து, ஓர் இனத்தை பயங்கரவாத இனமாக காண்பிக்க முற்படுவது எந்தவகையிலும் அறம் அன்று.

பயங்கரவாதம் இலங்கையில் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டு விட்டது என அரசாங்கம் மமதையில் மார் தட்டி வெற்றி விழா கொண்டாடியது.

தமிழினம் தோற்கடிக்கப் பட்டுவிட்டது என வீதிகளில் பால் பொங்கல் பொங்கி பரிமாறி களிப்புற்றது.

தென்னிலங்கையில் வீதிகளில் சிங்கக் கொடி சகிதம் பயங்காரவாதம் தோற்கடிக்கப்பட்டது என இளைஞர் பட்டாளம் களிப்பாட்டம் ஆடியது.

எங்கள் நாயகன் மகிந்தரா ஜபக்ஷ என ராஜயக்ஷக்களை தெய்வமாகப் போற்றினர் சிங்கள மக்கள்.

இவை அனைத்தும் தமிழினத்தின் மனங்களில் ஆறாத ரணத்தையே விதைத்தன.

ஒரு நாடு, இரு இனம் ஒரு இனத்தை வென்றதாய் இன்னொரு இனம் வெற்றி விழா கொண்டாடுவது தோற்ற இனத்தின் மனங்களை எவ்வாறு பாதிப்படையச் செய்யும் என்பதை காலம் சகலருக்கும் கற்பித்துக் கொடுத்தது.

ஆம், தமிழினத்தை வென்று விட்டோம் என உத்தியோக பூர்வமாக அறிவித்த அன்றைய இராணுவத் தளபதி சரத்பொன்சேகா அரசுக்கு எதிராக சதி செய்தார் என சிறையில் அடைக்கப்படுகின்றார்.


சிங்கள மக்களின் ராஜாவான மகிந்த ராஜபக்ஷ தன்னுடனேயே கூட இருந்த மைத்திரிபால சிறிசேனவினால் தோற்கடிக்கப்படுகிறார்.

தோல்வியின் வலி தாங்க முடியாமல் அவர் அம்பாந் தோட்டையில் உள்ள தனது வீட்டிற்கு செல்கிறார். அங்கு அவரின் சொந்தங்கள் அவரை கண்ணீருடன் வரவேற்கின்றன.

மீண்டும் ராஜபக்ஷக்கள் எழுச்சி பெறுகிறார்கள். அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதியாகிறார். விதிவசம் இலங்கையின் வரலாற்றில் இடம் பிடித்த மக்கள் எழுச்சியின் மூலம் அவர் தனது பதவியைத் துறந்து வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்கிறார்.















2009 மே மாதத்திற்குப் பின்னர் தென்னிலங்கையில் வருடா வருடம் பாரிய இயற்கை அழிவுகள் இன்றுவரை நடந்த வண்ணமே இருக்கின்றன.

இவ்வாறு தமிழினம் பட்ட இன்னல்களுக்கான முடிவுகள் தக்க பதிலாய் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன.

வன்னிப் பெருநிலப் பரப்பில் ஓர் இன அழிப்பே நடந்தேறியது என்ற உண்மையை முதலில் ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எவராலும் ஆற்ற முடியாத தமிழினத்தின் வலியை ஆற்ற வல்ல போர்க் குற்ற விசாரணையை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

தண்டனை வழங்கப்பட வேண்டும். அப்போதே இந்த நாடு அமைதிபெறும். வளர்ச்சியை நோக்கி நகரும்.

இல்லையேல் மாண்டுபோன தமிழினத்தின் சாபம் இலங்கையை உய்ய விடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 181





"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று பண்டைத் தமிழ் நாட்டுப் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களே! எல்லா ஊரும் நம்முடைய ஊர்தான். எல்லா மனிதர்களும் நம்முடைய உறவினர்கள் தான். ஊர் ஊராகப் போக வேண்டியது புதுவெள்ளம் பொங்கி வரும் நதிகளையும் புதிய இலை கள் தளிர்த்து விளங்கும் மரங்களையும் பல வர்ணப் பட்சிகளையும் மகான்களையும் மயில்களையும் மலைகளையும் மலைகளின் சிகரங்களையும் வானத்தையும் மேகத்தையும் கடலையும் கடல் அலைகளையும் பார்த்துக் களிக்க வேண்டியது. பசிக்கு உணவு கிடைக்கின்ற இடத்திலே உண்ண வேண்டியது. உறக்கம் வந்த இடத்தில் உறங்க வேண்டியது! ஆகா! இது வல்லவா இன்ப வாழ்க்கை! எளிதில் கிடைக்கக்கூடிய இத்தகைய ஆனந்த வாழ்க்கையை விட்டு விட்டு, தொல்லைகளும் சூழ்ச்சிகளும் ஆசைகளும் அபாயங்களும் நிறைந்த வாழ்க்கையை ஏன் மேற்கொள்ள வேண்டும்? எப்படியாவது இந்த நிலவறையை விட்டு இப்போது வெளியேறி விட்டால் போதும் பிறகு இந்த இருள் மாளிகையையும் தஞ்சாவூர்க் கோட்டையையும் விட்டு வெளியேறி விட வேண்டும்.

பின்னர், இத்தகைய தொல்லைகளில் என்றைக்கும் அகப்பட்டுக் கொள்ளவே கூடாது.

ஆகா! கதவு திறந்து மூடும் ஓசை! மறுபடியும் காலடி ஓசை! இன்றைய இரவின் அதிசயங்களுக்கு முடிவே கிடையாது போலும்! அதிசயங்களுக்கும் அளவில்லை! பயங்கரங்களுக்கும் எல்லையில்லை! இம்முறை வெகுதூரத்திலிருந்து அந்தக் காலடிச் சத்தங்கள் கேட்டன.

இரண்டு பக்கங்களிலிருந்தும் வருவதாகத் தோன்றியது. வந்தியத்தேவன் காது கொடுத்துக் கவனமாகக் கேட்டான். பொக்கிஷ நிலவறையில் நாலுபுறமும் சூழ்ந்திருந்த இருளைக் கிழித்துக் கொண்டு பார்ப்பவனைப் போல் உற்றுப் பார்த்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் எதிர்பார்த்தது போலவே அபூர்வமான காட்சியைக் கண்டான்.

கூத்து மேடையிலிருந்து மிகத் தொலைவிலே உட்கார்ந்திருப்பவனுக்கு மேடையில் தோன்றும் காட்சிகள் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது வந்தியத்தேவன் அப்போது கண்ட காட்சி.

(தொடரும்)

## முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ/து)

# பதவி வெற்றிடம்

மேற்படி சமாசத்தில் கீழ்வரும் பதவிகளுக்குத் தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பதவி :- பொது முகாமையாளர்**

சம்பளக்குறி இல :- 101/08
சம்பள அளவுத்திட்டம்:-20665-260 10-280 10-26065 (02/2022 இன்படி)

தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் / அதற்குச் சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளிவிபரவியல் / வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்./ இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

2. **பதவி:- கணக்குப் பதிவாளர்**

சம்பளக்குறி இல :- 215/13
சம்பள அளவுத்திட்டம் :-18360-160 10-170 10-21660(02/2022 இன்படி)

தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் எழுதுநர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் எழுதுநர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த சாதாரணதரப்பத்திரப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச்சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தி.

3. **பதவி:- களஞ்சியமுகாமையாளர்**

சம்பளக்குறி இல :- 208/13
சம்பள அளவுத்திட்டம் :-18360-160 10-170 10-21660 (02/2022 இன்படி)

தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கிளை முகாமையாளர் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த. சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் உட்பட 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

4. **பதவி:- விற்பனை உதவியாளர்**

சம்பளக்குறி இல :- 308/17
சம்பள அளவுத்திட்டம் :-16515-130 10-145 10-19265(02/2022 இன்படி)

தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் / 08 ஆம் தரகல்விச் சான்றிதழ்.

5. **பதவி:- அலுவலக உதவியாளர்**

சம்பளக்குறி இல :- 317/16
சம்பள அளவுத்திட்டம் :-16975-135 10-150 10-19825(02/2022 இன்படி)

தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ)கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்./ 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

6. **பதவி:- காவலாளி**

சம்பளக்குறி இல :- 315/17
சம்பள அளவுத்திட்டம் :- 16515-130 10-145 10-19265(02/2022 இன்படி)

தகைமைகள்

அ) 05 ஆம் தரகல்விச்சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

ஏனைய விபரங்கள்

- மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பப் படிவத்தினை சுயமாக தயாரித்து பூரணப்படுத்தி கடித உறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு தலைவர், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், மாங்குளம் வீதி, முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு 2023.05.31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வயதெல்லை 18 - 45 வரை (தற்போது கூட்டுறவுச் சேவையிலுள்ளவர்கள் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்)
- நியமனத்துக்கென தெரிவு செய்யப்படும் போது சங்கத்தால் கோரப்படும் ரொக்கப்பிணையை செலுத்துதல் வேண்டும்.
- இப் பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தினை விட சுற்றுநிருபம் 1/2022 இன் படி ரூபா 5000.00 மும், இலாபம் ஏற்படும் போது வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 7800.00 ம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதர படிகளும், காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தலைவர்,**
**முல்லை மாவட்ட க.தொ.கூ.ச.சமாசம்,**
**முல்லைத்தீவு.**

(C-6574)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய செயல்கள் நம்மை துன்புறுத்துவது, அவற்றை செய்த காலத்தில் அன்று. வெகுகாலம் சென்று தான். - ரூசோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உறவுகளே! விழித்தெழுந்து பாருங்கள் உயிர்பறித்தவர் பட்டலைகிறார்

இன்று மே – 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள். 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போரில் உயிரிழந்துபோன எங்கள் உறவுகளை நினைவேந்துகின்ற நாள்.

ஆம், உறவுகளின் பிரிவால் எந்நாளும் கண்ணீர் விடுகின்ற நம்மவர்கள் தங்கள் உயிர்களைப் பறிகொடுத்த மண்ணில் நின்று தங்கள் உறவுகளுக்காக அஞ்சலிக்கின்ற நாள்.

மே – 18 தனித்து நினைவேந்தல் நாள் மட்டுமல்ல.

சிங்களப் பேரினவாதம் எம் தமிழ் உறவுகளை துடிக்கத் துடிக்கக் கொன்றொழித்த கொடும் செயலை உலகுக்கு எடுத்துக்கூறுகின்ற நாளும் இதுவே.

தவிர, சிங்கள ஆட்சிக் கயமைகள் செய்த கொடுமையை சிங்கள மக்களை உணர வைக்கின்ற நாளும் இதுதான்.

இதையும் கடந்து, உயிர்ப்பலி எடுத்த கொடியவர்கள், தமிழ் மக்களுக்குச் செய்த வஞ்சகத்தை நெஞ்சத்தால் அறிய வைத்து, அவர் சந்ததியை சங்காரம் செய்கின்ற தமிழரின் பெரும்படையாய்; ஆற்றாது அழுகின்ற கண்ணீர் முள்ளிவாய்க்காலில் பெருக்கெடுக்கின்ற நாளும் இதுதான்.

ஆம், கொடியவர்களே! உங்களின் ஈனத்தால் கொன்றொழிக்கப்பட்ட தமிழர்கள் எத்தனை எத்தனை ஆயிரம்.

பெற்றவர்களைப் பறிகொடுத்து அநாதைகளாய் விம்மி அழுகின்ற குழந்தைகள் எத்தனை.

அந்தோ! பிள்ளையை, கணவனை, மனைவியை பறிகொடுத்து கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்றவர்கள் எத்தனை எத்தனை.

இப்பெரும் கொடுமையை இழைத்த நீவிர் கட்டிய கவசணமும் இழந்து ஓடிய நாளை ஒரு கணம் நினைமின்.

அண்ணன், தம்பி, அண்ணனின் மைந்தன் என ஆட்சி அதிகாரத்தில் அமருகின்ற உங்கள் கற்பனைப் பட்டியல் மக்கள் சூறாவளியில் அடிபட்டுப் போனதை நினைமின்.

அதோ! உங்கள் பௌத்த சிங்கள பேரினவாதம் பிச்சை எடுக்கிறது.

இரந்தாலன்றி சீவியம் இல்லை என்ற அவலத்துக்கு நாடு வந்தாயிற்று.

இத்தோடு முடிந்ததென்று நினையாதீர். பாவ பழிகளை பூரணப்படுத்தி, மொத்த அழிவுக்கும் ஆளாக, இன்னமும் இனத்துவேசம் பேசுகின்றார் சிலர்.

எம் உறவுகளே! உங்களைக் கொன்றொழித்தவர்கள் படும் பாட்டை ஒருகணமேனும் விழித்தெழுந்து பாருங்கள்.

நீங்கள் மரணித்து அவர்களுக்குக் கொடுக்கின்ற தண்டனை அண்டத்தில் இருக்கும் அத்தனை ஆயுதங்களாலும் செய்ய முடியாத தாக்குதல் என்றுணர்வீர். விழித்தெழுந்து பாருங்கள்.

கூடவே விழிநீர் சொரிகின்ற உங்கள் உறவுகளையும் சேர்த்து.

# வடக்கு, கிழக்கில் தமிழ் ஆளுநர்கள் நியமனம் நல்லிணக்கத்துக்கான சிறந்த சமிக்ஞை

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஒரே தடவையில் தமிழ் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சமிக்ஞையையும் இதன் மூலம் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூன்று ஆளுநர்களுக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறியதாவது தமிழ் பேசும் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளுக்குத் தமிழ் ஆளுநர்களை நியமிக்குமாறு தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர். மக்களின் கோரிக்கையும் அதுவாகவே இருந்தது. அந்த கோரிக்கையை ஜனாதிபதி நிறைவேற்றியமை வரவேற்கத்தக்கது.

வடக்கு மாகாணத்தில் தமிழ் ஆளுநர்கள் பதவி வகித்தபோதும் கிழக்கு மண்ணுக்கு முதன்முறையாகத் தமிழர் ஒருவர் நியமிக்கப் பட்டமையும் மகிழ்ச்சி.

அதுவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அந்த பதவிக்கு வந்திருப்பது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக அமைந்துள்ளது.

நாட்டில் மாகாண சபைகளில் தற்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லை. எனவே நிர்வாகம் என்பது ஆளுநர் வசமும், பிரதம செயலாளர்கள் வசமும் தான் உள்ளன.

மேலும், கிழக்கு மாகாணத்தில் சிறந்த சேவையை புதிய ஆளுநர் வழங்குவார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. அவர் மூலம் சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

செந்தில் தொண்டமான் மாகாணசபை உறுப்பினராக, அமைச்சராக, பதில் முதல்வராகப் பதவி வகித்துள்ளார். மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையில் ஏற்படும் நெருக்கடிகளை எப்படிச் சமாளிப்பது என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆகவே சிறப்பான சேவைகள் இடம்பெறும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார். (ம-7,9)

## மருந்துகளின் விலையை குறைக்கத் திட்டம்

### சுகாதார அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் மூன்று வாரங்களில் மருந்துகளின் விலையைக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுப்பெற்றதன் பலனை நோயுற்ற மக்களுக்கு விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதார அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் மருந்துகளின் விலையை 10% தொடக்கம் 15% வரை குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, டொலரின் பெறுமதி வீழ்ச்சி குறித்த தரவுகளை ஆராய்ந்து மருந்து விலை திருத்தம் தொடர்பான அறிக்கையைச் சுகாதார அமைச்சரிடம் உடனடியாக வழங்கவுள்ளதாகவும் தேசிய மருந்துகள் ஒழுங்கு முறைப்படுத்தும் அதிகார சபை (NMRA) கூறியுள்ளது. (ம-7,9)

## மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு விதிக்கப்பட்ட பயணத் தடை நீக்கம்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பலருக்கு விதிக்கப்பட்டிருந்த சர்வதேச பயணத்தடை நீக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மகிந்த ராஜபக்ஷ, பவித்ரா வன்னியாராச்சி, ரோஹித அபே குணவர்தன மற்றும் காஞ்சன ஜயரத்ன ஆகியோருக்கான தடையை கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே முற்றாக நீக்கியுள்ளார்.

இந்நிலையில் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட நபர்களின் கடவுச்சீட்டுகளை மீண்டும் ஒப்படைக்கவும் கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டார்.

2022 மே மாதம் இடம்பெற்ற பதிவான வன்முறை மற்றும் அமைதியின்மை தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக இவர்களுக்கு பயணத் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் க.பொ.த சா/த பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாட வழிகாட்டால் கருத்தரங்கு நாளை மறுதினம் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மாலை 6 மணிக்கு அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய முத்தமிழ் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே அரியாலை பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சனசமூக நிலைய தலைவர் அறிவித்துள்ளார். (4)

## போலி ஆவணங்களை சமர்ப்பித்து வெளிநாடு செல்ல முற்பட்ட 11 பேர் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களை சமர்ப்பித்து ஜோர்ஜியா செல்ல முயற்சித்த கிராம உத்தியோகத்தர் ஒருவர் உட்பட ஒன்பது ஆண்களையும் இரண்டு பெண்களையும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களாவர்.

இந்த சந்தேக நபர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## கொழும்பிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள்

(கொழும்பு)

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் 14 வருட நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய தினம் கொழும்பில் இடம்பெறவுள்ளன.

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வுகளிற்கான ஆதரவை வெளிப் படுத்தும் விதத்தில் இன்று பொரளையில் முள்ளிவாய்க் கால் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம், மகாறம்பைக்குளம்(தாஸ்நகர்), மகாறம்பைக்குளம் பிள்ளையார் வீதியடி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## மதுபானங்களின் விலைகளை குறைக்குமாறு கோரிக்கை

### மதுபான உற்பத்தியாளர்கள் சங்கம்

(கொழும்பு)

மதுபான நுகர்வு பாரியளவில் குறைந்துள்ளதாகவும் சாதாரண பொது மக்கள் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் மதுபான விலைகளைக் குறைக்க வேண்டுமெனவும் மதுபான உற்பத்தி யாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னணி மதுபான உற்பத்தி நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் நிதி அமைச்சின் பிரதி நிதிகளுக்கும் இடையில் அண்மையில் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

மதுபான வகைகளின் சடுதியான விலை அதிகரிப்பு காரணமாக மதுபான நுகர்வு பாரியளவில் குறைந்துள்ளது.

அண்மைய மாதங்களில் மதுபான விற்பனை 40 வீதத்தினால் குறைந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் இடம் மட்டுமல்ல அது எங்கள் வாழ்வியல்

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு

(நெளுக்குளம்)

முள்ளிவாய்க்கால் .என்பது ஒரு இடம் மட்டுமல்ல. எங்களுடைய வாழ்வியலாக மாறியிருக்கின்றது என தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத்தலைவரும், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வடகிழக்கு பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவருமான அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் தொடர்பு கொண்டு வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,2009 ஆம் ஆண்டின் இன அழிப்பின் நினைவு தினத்தை இன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்திலே நினைவு கூரப்பட இருக்கின்றது. .கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாக நிகழ்ந்தது போல இந்த ஆண்டும் சரியாக முற்பகல் 10.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாக இருக்கின்றன.

முள்ளிவாய்க்கால் என்பது ஒரு இடம் மட்டுமல்ல. எங்களுடைய வாழ்வியலாக மாறியிருக்கின்றது. எங்களுடைய தமிழ் இனத்தின் விடுதலைக்கான ஒரு புள்ளியாகவும் இந்த இடம் இருக்கிறது. இந்த மண்ணிலே படுகொலை செய்யப்பட்ட அத்தனை மக்களையும் நாங்கள் நினைவு கூர கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். ஆகவே இந்த நினைவேந்தலை பங்கெடுக்க தமிழ் இன உணர்வாளர்கள் அனைவரையும் பொதுக்கட்டமைப்பின் சார்பாக அழைத்து நிற்கின்றோம்.

இந்த நிகழ்விலே பங்கெடுக்க முடியாதவர்கள் உங்களுடைய இல்லங்களில் மாலையிலே நீங்கள் விளக்கேற்றி இறந்தவர்களுடைய ஆன்மாவிற்காக மன்றாடும்படி கேட்டு நிற்கின்றோம்.இதனை ஏன் நாங்கள் செய்கிறோம் என்பதை எங்களுடைய பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கும்படியாகவும் கேட்டு நிற்கின்றோம்.

இந்த முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கு காரணமான அத்தனை பேரும் தண்டிக்கப்பட வேண்டும் என்கிற அந்த ஒருமித்த குரலில் மக்களினுடைய எண்ணங்கள் அனைத்தும் நிறை வேறக் கூடிய மக்களுக்கான நிர்வாக அல்லது எந்த தாகத்தோடு நாங்கள் போராடினோமோ அந்த தாகங்கள் நிறை வேறும் படியாக நாங்கள் எம்மை அர்ப்பணிப்பதும் அவசியமாக இருக்கிறது.

இன்றும் இடம் பெற்று வருகின்ற பல்வேறு வகையான இன அழிப்பு விடயங்கள், பௌத்த மயமாக்கல்கள், இவற்றுக்கு எதிராகவும் நாங்கள் தொடர்ந்து குரல் கொடுப்பது அவசியம் என்பதை இந்த வேளையிலே உணர்த்தி இதிலே அனைவரையும் பங்கெடுக்குமாறு அன்போடு கேட்டு நிற்கின்றோம் என தெரிவித்தார். (4-299)



தென்மராட்சி-வரணி மத்திய கல்லூரி முன்பாக நேற்று புதன்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (படம்- சுபேசன்)



பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் ச. வில்வரசனின் "பசி உறு நிலம்" கவிதை நூல் அறிமுக நிகழ்வு கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது.

# வவு.சிறீராமபுரம் கிராமத்தில் மின்சாரக் கம்பிகள் மேல் முறிந்து வீழ்ந்துள்ள மரக்கிளைகள்



(நெளுக்குளம்)

வவுனியா சிறீராமபுரம் கிராமத்தில் மின்சாரக் கம்பிகளின் மேல் மரக்கிளைகள் முறிந்து வீழ்ந்து காணப்படுகின்றன.

இது தொடர்பில், வவுனியா மின்சாரசபை அலுவலகத்திற்கு இரண்டு நாட்களாக முறைப்பாடளித்தும் மின்சார சபை அதிகாரிகளால் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் வவுனியா சிறீராமபுரம் கிராமத்தின் தொல்காப்பியர் வீதியின் வதிவிட மின்பாவனையாளர்கள் தமது மின் உபகரணங்களை உபயோகிக்காது அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

இக்கிராமத்தில் கடந்த நான்கு நாட்களாக தொடர் மின்தடை ஏற்பட்டிருந்த வேளையும் இ.மி.ச. அதிகாரிகள் பாராமுகமாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(4-6-299)



**ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் -நயினா தீவு**

**2023 ஆம் ஆண்டுக்கான உயர்திருவிழாக் காலத்தில் தற்காலிகக் கடைகள் அமைத்தல், உடை தேங்காய் பெற்றுக் கொள்ளுதல் ஆகிய வற்றுக்கான ஏலம் கூறுதல்.**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் 2023 ஆம் ஆண்டின் உயர்திருவிழா 2023.06.19 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 2023.07.04 ஆம் திகதியன்று நிறைவுபெறுவதற்கு திருவருள்பாலித்துள்ளது.

இக்காலப்பகுதியில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினரால் சுட்டிக்காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும் உடை தேங்காய்க்கான பகிரங்க ஏலம் கூறுதலும் 28.05.2023ஆம் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய வளாகத்தில் இடம் பெறும். ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்று கேட்டும் கொள்ளப்படுகின்றனர்.

**குறிப்பு**

01.குளிர்பானக்கடைகள் நடத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும். சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

02. ஏலத்தில் முதல் நிலைபெற்றவர்கள் அன்றையதினமே ஏலத்தொகையின் மூன்றில் ஒரு பங்கினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மிகுதித்தொகையினைப் பத்தாவது நாள் திருவிழாவிற்கு முன்னதாக செலுத்தி முடிக்க வேண்டும்.

**அன்னையின் சேவையில்,**
**செயலாளர்,**
**திரு.ந.மோகனரூபன்,**
**அறங்காவலர் சபை-**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு.**

(சி-6572)

# எனது 32 ஆண்டு ஆன்மிகப் போராட்டப் பாதையிலே...



**சோபகிருது வருஷமே நீ என்ன செய்யப் போகின்றாய்....**
**என் அன்பு உள்ளங்களே!**
**நடப்பவை யாவும் நன்மைக்கே!**

நாம் முற்பிறப்பில் செய்த நன்மை, தீமை என்பவற்றின் பயனாக இப் பிறப்பில் பிறந்து வாழ்க்கை என்னும் வட்டத்தினுள் இன்பம்.துன்பம் யாவற்றையும் அனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.இவற்றில் நன்மையின் பயனாக இன்பத்தையும் தீமையின் பயனாக துன்பத்தையும் அனுபவிக்கின்றோம்.வரும் துன்பங்களைத் தாங்க முடியாது இறைவனிடம் ஓடுகின்றோம். காரணம் மனிதனால் முடியாதவற்றிற்குத் தான் இறைவன். இறை வழிபாட்டின் மூலம் தான் வரும் துன்பங்களிலிருந்து நாம் எங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.கர்மாக்களையும் போக்க முடியும்.அதற்காகத்தான் இறைவழிபாடு முக்கியம் அவசியம்.

**இறைவனின் தொழிற்பாடு**

மனிதனுக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுப்பதோடு மனிதனைப் பாதுகாப்பதாகும்.எப்படி? கண்ணுக்கு வருவதைப் புருவத்தோடு போக்குவது. தலைக்கு வருவதை தலைப்பாகையோடு போக்குவது எங்கள் கர்மாவை நாங்கள் அனுபவித்துத்தான் ஆக வேண்டும்.ஆனால் எதற்கும் ஓர் எல்லை உண்டு.அதற்கு மேல் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்.நிச்சயம் கைகொடுப்பார் நம்புங்கள்.

எங்கள் நாட்டுப் பிரச்சினையிலும் தமிழினத்தின் கர்மாக்கள் இன்னும் முடியவில்லை என்பது தான் அர்த்தம். முடியாத கர்மாக்களை எல்லாம் முடித்து வைக்க வந்திருக்கிறது சோப கிருது வருஷம். சோபகிருது வருஷத்தில் தமிழினத்தின் கொடிய கர்மாக்களை போக்கி துன்பங்கள் நீங்கி இன்பமாய் வாழ சர்வ வல்லமை பொருந்திய சுழிபுரம்-பறாளாய் ஈசுர விநாயகப் பெருமானை வணங்கி வாழ்த்துவோமாக! இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க.

**குறிப்பு- சுப கிருது வருஷம் விடைபெறும் போது வெள்ளத்துடன் கூடிய மழை என்றும் நில நடுக்கம் ஏற்படும் எனவும் ஐயா முன் கூட்டியே அடியார்களுக்கு அறியத்தந்திருக்கின்றேன்.**

(15538)

**சோழியூரான் பிறைசூடி குரு.**
**(ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும் பரிபாலகரும்).**
**18.05.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாநகர...

மாநகர சபை முன்னாள் முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் சரணடைந்த நிலையில் பொலிஸாரினால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதிக்கிளைக் கூட்டத்துக்கு பின்னர் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக சட்டத்தரணியுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோதே இம்மானுவேல் ஆனல்ட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதி கிளைக் கூட்டத்துக்கு பின்னர் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதலை யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் மேற்கொண்டதாக காயமடைந்தவர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம்-7,9,33)

## வட மாகாண...

வட மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

மேலும் கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமானும் வட மேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். (ம-7,9)

## தொல்பொருளை...

மாறும் பொலிஸாருக்கு பணித்துள்ளது.

வெடுக்குநாறிமலையில் சிலைகள் உடைக்கப்பட்ட விடயம் தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கில் முறைபாட்டாளர்கள் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இந்த வழக்கில் தொல்பொருள் திணைக்களம் முதன்முறையாக முன்னிலையாகி நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மீறி முறைப்பாட்டாளர்கள் செயற்பட்டதாக தகவல் கொடுத்திருந்தனர்.

இன்றும் அந்த விடயத்தை கூறியிருந்தார்கள். இருப்பினும் தொல்பொருள் தொடர்பான இந்த பிரதேசத்திலே மார்ச் மாதம் இடம்பெற்ற மோசமான விக்கிரகங்கள் உடைப்பு சம்பவத்தில் தொல்பொருள் திணைக்களம் ஒரு விரலைகூட அசைக்கவில்லை.

அந்த விடயத்தை கரிசனையில் கூட எடுக்கவில்லை. அதனை மீள நிறுவும் படி நீதிமன்றம் உத்தரவை வழங்கிய பின்னரே மீள நிறுவியதால் தொல்பொருள் சேதமேற்பட்டதாக பொய்யான புகாரை தெரிவிப்பதாக நாம் எடுத்துரைத்தோம்.

அந்தவிடயத்தில் இதுவரைக்கும் சந்தேகநபராக எவரையும் குறிப்பிடவில்லை. தொல்பொருள் திணைக்களம் வனவளத் திணைக்களம்போன்றவற்றால் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுகின்ற ஒரு இடத்தில் இப்படியான விக்கிரகங்களை உடைத்தமை ஒரு விசித்திரமான விடயம் என்பதையும் கூறினோம்.

எனவே இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு கட்டளையிட்டுள்ளார். அத்துடன் தொல்பொருளுக்கு சேதம் ஏற்பட்டால் அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

இது நீதிமன்ற கட்டளையை மீறி செயற்பட்டமை தொடர்பாக இருப்பதால் அதற்கான நடவடிக்கைகளை உரியமுறையிலே எடுக்குமாறு தொல்பொருள் திணைக்களத்திற்கு நீதிமன்றால் அறிவித்தல்கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொல்பொருள் அடையாளங்கள் சேதமாகின்ற வகையில் செயற்படாவண்ணம், சமய சடங்குகளை எளியமுறையிலே செய்வதற்குமான எச்சரிக்கையும் முறைப்பாட்டாளர்களான எங்களுக்கு மன்றால் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

நேற்றைய வழக்கில் உடைக்கப்பட்ட விக்கிரகங்களுடன் ஆலயத்தின் பூசகர் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## விடுதலைப் புலி...

களில் கலந்து கொண்டனர். தமிழ் மக்களின் வாக்குகளால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றம் சென்ற எங்களுக்கும் அவ்வாறான பொறுப்பும் தார்மீகக் கடமையும் உள்ளது.

எமது பிரச்சினை தொடர்பாக நாம் எந்த உலக நாடுகளிடம் பேச செல்லும் போது அவர்கள் சொல்லும் கருத்து அரசாங்கத்துடன் பேசுமாறு அரசாங்கம் சரியோ பிழையோ அரசாங்கத்துடன் பேச வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பான எங்களுக்கு உண்டு.

ஜனாதிபதியுடன் கடந்த 8ஆம் திகதி நடந்த சந்திப்பை தொடர்ந்து கடந்த 11ஆம்திகதி அதிகார பரவலாக்கம் தொடர்பான சந்திப்பு இடம்பெற்றது.

அதில் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் வடக்கு, கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகத்திற்கான முன்மொழிவை முன்வைத்தபோது அதை ஜனாதிபதியும் முன்மொழிந்தார்.

அதை நாங்கள் நிராகரித்தோம். குறித்த கலந்துரையாடலில் மிக முக்கியமான விடயங்கள் பேசப்படவில்லை அதிகாரப் பகிர்வு தொடர்பாக தொட்டு பார்க்கப்பட்டது. ஏற்கெனவே இலங்கையின் சட்டத்திற் குட்பட்ட மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு எல்லா தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டது. குறித்த தேர்தலை நடத்தினால் அதிலிருந்தாவது ஆரம்ப புள்ளி முன்வைக்கப்படலாமா என்று கூட பேசப்பட்டது. இன்று தமிழர்களுக்கான தீர்வு சமஷ்டி என்பதிலிருந்து விட்டுக்கொடுத்தோ விலகியிருந்தோ பேசவில்லை

முஸ்லிம் கட்சிகள் இணைக்கப்படவில்லை என்பது தவறானது. பேச்சுவார்த்தையில் அமைச்சர் நஸீர் அஹமட்டும் இருந்தார். வடக்கு, கிழக்கு இணைப்பு வரும்போது முஸ்லிம் மக்களுடன் சேர்ந்ததாகவே வரும். அது தான் கட்சியின் தலைவரின் நிலைப்பாடும் என்றார். (ம-7,9,316)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 17/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1572
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 3 6 9 1 0 4

தன நிதானய
திகதி - 2023.05.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1147
K 09 11 69 75
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.05.17 சீட்டிழுப்பு இலக்கம் 3359
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
K 05 18 35 48
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1465
V 23 01 12 16 54

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.17
சீட்டிழுப்பு இலக்கம் 426
துலாம் 06 37 39 61 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/17
சீட்டிழுப்பு இலக்கம் 5117
P 4 0 6 9 6 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2091 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.05.17 தினம் புதன்கிழமை
D 02 13 47 65
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,711,740/-

சனிதா Shanida
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.17
வெற்றி வாரம்: 4252
வர்ணம்: ஊதா
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 45,401,099.70
வெற்றி இலக்கங்கள் 03 10 12 51 ஆங்கில எழுத்து E

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,562,360.80
திகதி 2023-05-17
வெற்றி வாரம் 3803
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 06 22 27 62 கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,263,540/-

கப்றக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 08 11 15 18 30
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 330,523,407.80
1267 வெள்ளி நீலம் 2023.05.17 புதன்கிழமை

ஜயோதா Jayoda
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.05.17
வெற்றி வாரம் : 1922
வர்ணம் : மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 43,003,282.00
வெற்றி இலக்கங்கள் 01 08 64 66 ஆங்கில எழுத்து A

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 1917
வர்ணம் : றோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2023.05.17
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 50,673,872/-
வெற்றி இலக்கங்கள் 17 60 61 67 ஆங்கில எழுத்து I

மஹஜன சம்பத 5116இல் சுப்பர் பரிசு சுன்னாகத்தில்

நேற்றுமுன்தினம் 16/05/2023 சீட்டிழுக்கப்பட்ட **மஹஜன சம்பத** ரிக்கட் ஊடாக சுப்பர் பரிசு **ஒரு கோடி 28 இலட்சம் (12854,116/-) சுன்னாகம் முகவர் பாலசுந்தரம் சண்முகதாஸ்** என்பவரின் விற்பனையில் வெல்லப்பட்டுள்ளது. மேலும் அதே சீட்டிழுப்பில் ரூபா **100,000**மும் வெல்லப்பட்டுள்ளது. அத்துடன் இம்மாதம் 03/05/2023 **மஹஜன சம்பத** சீட்டிழுப்பு **5105 றோ** ஊடாக **கே.கே.எஸ் முகவர் ஆரணி ஜெயவாணன்** என்பவரது விற்பனையில் ரூபா **20 இலட்சம் (20,00,000)** வெல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றிற்கு மேலாக யாழ்.மாவட்டத்தில் **5 இலட்சங்கள்** பலவும் **01 இலட்சங்கள்** பலவும் தொடர்ச்சியாக பரிசு மழை பொழிந்த வண்ணம் உள்ளது. லொத்தர் ரிக்கற்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

(15544)

கனகலிங்கம் திலகவதி
தேசிய லொத்தர் சபை மாவட்ட முகவர்
இல.357, KKS வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியாவில் சைவ தமிழ் முறைப்படி இறுதிக்கிரியைகள் செய்ய குருக்கள் தேவை

## SAIVA FUNERAL PRIEST (VACANCY) AUSTRALIA

அவுஸ்திரேலியாவில் மெல்போன் நகரில் கடந்த -பல வருடங்களாக செயல்பட்டு வரும் தமிழ்க் கலாசார அமைப்பிற்கு சைவத் தமிழ் விதிகளின்படி இறுதிக் கிரியைகள் செய்வதற்கு அனுபவம் வாய்ந்த குருக்கள் தேவைப் படுகின்றது.

ஆங்கில அறிவுடன், 50 வயதுக்கு உட்பட்ட இறுதிக் கிரியைகள் செய்த அனுபவம் உடையோர் விண்ணப்பிக்க லாம். (SAIVA FUNERAL PRIEST)

- கிராம சேவையாளரின் நற்சான்றிதழ்
- இந்து குருகுல நிர்வாகத்தின் சான்றிதழ்
- கல்வித் தகைமை
- பிறப்புச் சான்றிதழ்
- இலங்கை அடையாள அட்டை

என்பன சுயவிபரக் கோவையுடன் இணைக்கப்பட வேண்டும். 25.05.2023 க்கு முன்பு விண்ணப்பிக்கவும். நேர்முக விசாரணை (INTERVIEW) யாழ்ப்பாணத்தில் இடம்பெறும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

**திரு.M.இராஜகோபால்,**
**இல.44/1, அம்பாள் வீதி,**
**நாயன்மார்கட்டு.**
**076 162 0387**
**Email : dhileepan076@gmail.com**

(15532)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15549)

**076 825 7716 (ஆகாஸ்)**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-5576)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

**0777-068-777**

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்



(15337)

077 544 8503

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கீரிமலையில் 78 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- கீரிமலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- கீரிமலை சிவன் கோவில் (நகுலேஸ்வரம்) இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- காணியின் வடக்கு எல்லை - கடல், தெற்கு எல்லை - பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
- ஒரு பரப்பின் விலை பத்து இலட்சம் ரூபாய் (1000,000/=).



**076 911 9371, 076 739 0413, 077 874 8135**

(15540)



# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சுப்பிரமணியம் புவனேஸ்வரி (புவனம்)

தோற்றம் 08.09.1954 | திதி: சதுர்த்தசி | மறைவு 29.05.2022



அன்பின் ஊற்றாகி எம்
ஆழ்மனங்களில் பதிந்திருக்கும்
எம் அருமை அன்னையே!
வருடம் ஒன்று ஓடி மறைந்ததம்மா
மாறுமோ எம் மனங்களில்
உன் நினைவு!
நீங்கள் எம்முடன் இல்லை என்றாலும்
உம் நினைவுகள் எம்முடனேயே
வாழும் அம்மா!

கடந்த 29.05.2022 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப குல விளக்கின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் இன்று 18.05. 2023 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

வீ.எம்.றோட்,
பருத்தித்துறை. (15528)

தகவல்: பிள்ளைகள்
077 669 1803

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.